# திராவிடன்

ஆசிரியர் : என்.வி.என்.


தலையங்கம்

# நலிவுற்ற மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்!

"சுதந்திரப் போராட்டம் முடிந்தபின் நான் உயிருடன் இருந்தால், என் நாட்டவருடனேயே நான் சாத்விகப் போராட்டம் நடத்தவேண்டியிருக்கும்" என்று ஒருமுறை காந்தியடிகள் சொன்னார்.

காந்தியார் நம்மிடமிருந்து பிரிந்து மறைந்துவிட்டார்; அவருக்குப் பதிலாக தற்போது சாத்விகப் போராட்டம் நடத்தவேண்டிய இயக்கமாக, அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையில் இயங்கும் தி. மு. கழகம்தான், அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கை ஒளியூட்டிக்கொண்டிருக்கிறது.

தத்தித் தவழும் குழந்தையை மெத்தப்பாடுபட்டு வளர்ப்பதைப் போல், இந்த நாட்டு மக்கள், கழகத்தைத் தங்கள் கண்ணின் மணியெனப் பாதுகாத்துக் கடந்த 14-ஆண்டுகாலமாக வளர்த்திருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது 14-ஆண்டுகாலப் புனிதப் பயணத்தை முடித்துக்கொண்டு 15-ஆம் ஆண்டினை இந்தக் கிழமையில் துவக்கியிருக்கிறது. முளைத்த சில ஆண்டுகளிலேயே குளிர் நிழலும் பெரும் பலனும் கொடுக்கும் 'உயிர்ச்சத்து'மிக்க மரங்களைப்போல், கழகம் தனது 14 ஆண்டுகால வளர்ச்சியிலேயே ஒரு நூற்றுண்டு கால மாறுதல்களை—புதிய சிந்தனை வளத்தை—நேர்மையான அரசியலை விரும்பும் ஆவலை-மக்களிடையில் வேரூன்றச் செய்துவிட்டிருக்கிறது.

14 ஆண்டுகாலமென்பது அரசியலில் "கை நொடிப் பொழுதாக" வருணிக்கப்படலாம். அரசியல் கட்சிகளின் 14 ஆண்டு கால இடைவிடாத தொண்டும் நேர்மையான பயணமும் பாராட்டிப் பரவசப்படக் கூடியதே ஆகும். இந்தத் துணைக்கண்டத்திலேயே கழகத்தைத் தவிர்த்து, ஒரே சீரான கொள்கையை— மக்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை — எதைக் கண்டும் அஞ்சாத மனத் திண்மையுடன் எடுத்துச் சொல்லிப் போராடி வந்திருக்கும் வேருெரு அமைப்பைக் காணமுடியாது. "வால்டேரும் ரூசோவும் பிறக்காத 18-வது நூற்றுண்டை நினைத்துப்பார்க்கவே பயமாக இருக்கிறது" என்று சரித்திராசிரியன் ஒருவன் சொன்னான். கழகம் இல்லாத 14 ஆண்டுகால அரசியல் வாழ்வு இந்தத் துணைகண்டத்து மக்களால்—குறிப்பாக தென்னகத்துச் சமுதாயத்தால்—நினைத்துப் பார்க்கவே வேதனை தரத்தக்கதாகும். கழகம் மட்டும் இல்லாதிருந்தால், மக்களின் அரசியல் வாழ்வு பைத்தியக்காரன் வாழ்வுபோல் பரிகசிக்கத் தக்கதாக இருந்திருக்கும்; வடக்குத் திசையிலிருந்து வீசும் வரட்சியும் எரிச்சலும் தரத்தக்க ஆதிக்க வாடைக்காற்றில் உலர்ந்து மெலிந்து தென்னகத்துச் சமுதாயமே சருகாகச் சூம்பிப்போயிருக்கும்.

இப்படிச் சூம்பிப்போவதுதான் சுகம் என நினைக்கும் துரோகிகளுக்கு இடையில்தான் கழகம் 14 ஆண்டுகளாக உயர்தரமான ஒரு அரசியல் பாரம்பரியத்தை—மனித கண்ணியத்தின் அடிப்படையில் அமையும் ஜனநாயக அரசியலை உருவாக்கப் போராடி வந்திருக்கிறது.

அதிகார ஆசை அடிப்படையில் இயங்கும் அரசியல் நோக்கிலிருந்து பார்த்தால், கழகம் தடை செய்யப்பட்டுவிடக்கூடிய அமைப்பாக—வீழ்த்திவிடக்கூடிய அரசியல் கட்சியாக இன்றைக்குச் சிலருக்குத் தெரியலாம். ஆனால், மனித சுபாவத்தை—பொறுமையுடன் காத்திருந்தும் கஷ்ட நஷ்டங்களை ஏற்றும் அநீதியை வீழ்த்தக்கூடிய உலகத்துச் சரித்திர நியதியை உணர்ந்தவர்களுக்குக் கழகம் ஒரு விடுதலைப் பாசறையாக—வீரர் குழுமியிருக்கும் கோட்டமாகத் தெரியும்.

அழிக்கப்பட்டு விடுவோம் என்று சர்வ நிச்சமாகத் தெரிந்து கொண்ட ஆத்திரத்தில், கையைக் காலை உதறி—உதட்டைப் பல்லை நெறித்துக் கொக்கரிக்கும் எதேச்சாதிகாரச் சக்திகளுக்கு, ஆணித்

## மாறன்—மல்லிகா



19—9—63 அன்று வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்ட மணமக்கள் மாறன்—மல்லிகா ஆகியோரும், திருமண விழாவிற்கு தலைமைவகித்த அறிஞர் அண்ணு அவர்களும்.


21—9—63
8 பக்கங்கள்

வாரஇதழ்

16 காசு.

**தலையங்கம் தொடர்ச்சி..................**

தரமாக அறைகூவல் விடுக்கும் திறன் கழகத்தைத் தவிர வேறு எந்த அமைப்புக்கும் இன்று இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டது, இந்த நாடு !

உலகத்தின் மிக மூத்த விடுதலை இயக்கமாகக் கொள்ளப்பட்டு வந்த அல்ஜீரிய விடுதலை இயக்கம், அறைகுறையாகக் கிடைத்த தனது வெற்றியுடன் அயர்ந்திருக்கும் இந்த நாளில், ஒரு இனம் முழுமைக்குமாக விடுதலை கோரி, சுதந்திரக்குரல் கொடுக்கும் இயக்கம் இந்த உலகத்திலேயே இப்போதைக்குக் கழகம் ஒன்று தான் என்று துணிந்து சொல்லலாம்.

எந்தக் காரணத்தினாலாவது இந்த இயக்கம் தனது பயணத்தில் துவளுமானால், அதற்குப்பிறகு விடுதலை—சுதந்திரம் என்ற சொல்லை உலகத்தின் தற்போதைய நிலையில் வேறெங்கும் கேட்கவே முடியாது; உரிமைகள் பற்றி பேசப்படலாம்; விடுதலை நாதம் கிளம்பவே வழியில்லை.

அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் தங்களை உருக்குலைத்துக் கொண்டிருக்கும் திராவிட மக்கள், கழகம் துவண்டுவிட ஒப்புவார்களா ?

''மாட்டார்கள்'' என்று அறைகூவல் விடுக்கிறது, அறிஞர் அண்ணா அவர்களின் தலைமை !

இந்த அறைகூவலை ஏற்றுக்கொள்வதாக பல முனையிலும் அறிவித்துவிட்டிருக்கிறது, அரசாங்கம் !

எல்லா அரசியல் அதிகாரங்களுக்கும் முழுமையான உறைவிடம் மக்களா, அல்லது அரசாங்கமாகப் பார்த்து பிச்சை போடுவதுதான் மக்களின் உரிமைகளா என்பதைத் தனது 15-வது ஆண்டுப் பயணத்தில் பார்த்துவிட கழகம் முடிவு செய்துவிட்டிருக்கிறது.

இந்த முடிவின் அடிப்படையில்தான், இந்தித் திணிப்பையும், பிரிவினைத் தடைச்சட்டத்தையும் போராட்டத் தீயில் புடம் போட்டுப் பார்த்துவிட கழகம் மக்கள் மன்றத்தில் ஆதரவு கோரி நிற்கிறது.

கழகத்தைத் தவிர்த்த எல்லா அரசியல் கட்சிகளும் இன்று, அரசியலுக்காகவே அரசியல் என்று வேதாந்தம் பேசி, அரசியல் சட்டங்களை அப்படியே கண்களை மூடிக்கொண்டு பூசனை செய்வது தான் மக்களுக்கு அழகு என்று பகிரங்கமாகத் தெரிவிக்கின்றன.

''எல்லா அதிகாரங்களும் மக்களிடமிருந்து கிடைத்து மக்கள் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டியவை'' என்ற காந்தீயப் பண்பாடு—கோட்பாடு கொள்ளை மலிவான விலைக்கு கம்யூனிஸ்டுகளிடம் விற்பனை செய்யப்பட்டுவிட்டன. ஓரரசு, ஓராட்சி, ஒரே கட்சி என்கிற கம்யூனிச நெடி நாற்றம் காங்கிரஸ் அமைப்பை மூச்சினைத் திணறச்செய்து சவமாக ஆக்கிவிட்டது. கம்யூனிசத் தத்துவத்தைக் காட்டிலும், கம்யூனிச அரசியலமைப்பின் தடபுடல் தன்மை பாமர மக்களைப் பயங்காட்டத் தொடங்கிவிட்டிருக்கிறது.

இனம், மொழி, பண்பாடு எதையுமே இரண்டாம் பட்சமாக ஆக்கி, ஆட்சி அதிகாரத்தை—ஆதிபத்திய உரிமையை நிலை நாட்டும் பலாத்காரக் கம்யூனிசத்தின் தத்துவங்கள் காங்கிரஸ் ஆட்சியில் ஊடுருவத் தொடங்கிவிட்டன,

இந்தித் திணிப்பு

கோதுமைத் திணிப்பு

பிரிவினைத் தடைச்சட்டம்

போன்றவை, ஜனநாயக அரசியலமைப்பின் அவமானச் சின்னங்களாகக் கருதப்பட வேண்டியவை; காந்தியப் பண்பாட்டுக்கு நேர்முரணானவை.

இந்தச் சட்டங்களை, தமக்குத் தாமே தொல்லைகளை ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு மனிதனும் அமைதியாக எதிர்க்கவில்லையென்றால், சிறைக்குப் போயாவது அவைகளின் அநீதிகளைப் பறைசாற்றவில்லையென்றால், காந்தியார் நமக்கிடையில் பிறந்தவர் என்று சொல்லிக்கொள்ள நாம் அருகதையற்றவர்களாவோம்—சுதந்திரப் போராட்டத்தில் நெடிய பாரம்பர்யத்தை உடையவர்கள் என்று பேசிக்கொள்ள அருகதையற்றவர்களாவோம்.

கடந்த 14 ஆண்டுகளாக மனித கண்ணியத்தைப்போதித்து வந்த கழகம், 15-வது ஆண்டுப் பயணத்தில் மனித கண்ணியத்தைக் காப்பதற்குப் போராடச் சங்கற்பம் பூண்டு நிற்கிறது. இந்தித் திணிப்பு மனித கண்ணியத்திற்கு—பரம்பரையாக வரும் பண்பாட்டுணர்வுக்கு—மிகப் பெரிய அறைகூவலாகும். அரசாங்கத்திற்குரிய நால்வகைப் படைகளின் பலத்துடன், காங்கிரஸ் அமைப்பு என்ற ஐந்தாம் படையும் அரசாங்கத்திற்கு—அதன் கேவலமான கொள்கைகளுக்கு ஆதரவாக நிற்கிறது. வெளிநாட்டுக்காரனை ஆதிக்க வெறியன் சீனனை வரவேற்க கம்யூனிஸ்டுகள் என்ற ஐந்தாம்படையும், உள்நாட்டில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து மிதிக்க காங்கிரஸ் அமைப்பென்னும் ஐந்தாம் படையும் சேர்ந்து இந்த நாட்டை கெடுத்துக் குட்டிச்சுவராக்க முனைந்துபட்டிருக்கின்றனர். இருவருக்கும் அடிப்படைக் கோட்பாடு பலாத்காரமே !

பலாத்காரத்திற்குச் சரியான மாற்று காந்திய முறையே ! காந்தியார் இறந்துவிட்டார் என்ற திருப்தியில் பலாத்கார முறை கொண்டாட்டம் போட்டுக் களிக்கலாம் ; ஆனால், அதே காந்தி யாரின் மறு பதிப்பாக தென்னாட்டுக் காந்தியாக நடமாடி வரும் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் காந்தியத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படப் போவதையும், அவர் தலைமையில் பணியாற்றும் கழகம் எடுத்த பணியில் வெற்றியுறப் போவதையும், கழகத்தின் 15-வது ஆண்டுப் பயணம் எதேச்சாதிகாரிகளுக்கு அறிவிக்கத்தான் போகிறது.

காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரகத்தைப் போல், அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டக் கலைஞர் கருணாநிதி தலைமையில் போராடவிருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் காந்தியத்திற்குப் புரட்சிகரமான உரை எழுதப் போவதை வருங்கால சரித்திரம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும்.

கழகத் தோழர்களே !

'சாகாவரம், பெற்ற விடுதலை உணர்வின் ஒளியைப் பிரகாசப்படுத்திக்காட்ட கடந்த 14 ஆண்டுபோல் இந்தப் பதினைந்தாம் ஆண்டிலும் முனைந்து முயலுங்கள் !

அதிகார வெறியர்களின் கூர்மையான ஆயுதங்கள் மட்டும் கழகத்தை நோக்கித் திருப்பப்பட்டிருக்கவில்லை. ஜனநாயகம், மனித கண்ணியம், விடுதலை உரிமை ஆகியவையும் கழகத்தை—அதன் வெற்றியை எதிர்பார்க்கின்றன.

அறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலேயே நமக்கு விடுதலை வந்துவிட வேண்டுமென்ற 'வெறி'யுடன் பாடுபடுவோம்; ஏனென்றால், அறப்போராட்டத்தின் இலக்கணத்தை காந்தியைப் போல் பழுதின்றி உணர்ந்தவர் அவர் ஒருவரே !

o

## மணவழகர் மன்றம் - குழந்தையர் விழா

——[0]——

22—9—63 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணி அளவில், மன்றப் பணிமனையில், வழக்கறிஞர் திரு. பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

திரைப்பட நடிகை தோழியர் குமாரி கே. சந்திரகாந்தா அவர்கள் மணவழகர் மன்றத்தின் சார்பில் இரவுப்பள்ளி மாணவ—மாணவிகளுக்கு, நோட்டுப் புத்தகங்கள், பலகைகள், எழுதுகோல்கள் முதலியன வழங்குவார்.

திருவாளர்கள் வழக்கறிஞர் கே. சந்திரசேகரன், வழக்கறிஞர் இராசன், பா. ர. இலட்சுமிபதி ஆகியோர் பேசுவர். திரு. எம். ஜி. சாமிநாதன் அவர்களின் ''நவீன கதா காலட்சேபம்'' நடைபெறும்.


# ''அறுவடை''

(கலை—இலக்கியத் திங்கள் இதழ்)

o

அடுத்த இதழில்

**''வினு - விடை''**

**அறிஞர் அண்ணா விடையளிக்கிறார்.**

விவரங்கட்கு :—

**அறுவடை அலுவலகம்**

50-பி. வரகுவாசல் தெரு,

**சின்ன காஞ்சிபுரம்**

# அண்ணல் காந்தியும் அறிஞர் அண்ணாவும்!

திருவடியான்

அரசியலில் அறப்போர் முறைதான் மெத்த சிறந்ததென, ஐரோப்பாவில் தோன்றிய 'சாக்ரடீஸ்' கண்டுபிடித்து, நடைமுறையில் செயலாற்றத் துவங்கிய போது அதில் வெற்றி காணாமலே சாகடிக்கப்பட்டார், என்றாலும்—பின்னால் தோன்றிய நமது காந்தியடிகள் அதைப் பின்பற்றி வெள்ளையர்களிடையே அறப்போர் நிகழ்த்தி அதில் பெரு வெற்றி கண்டார்.

இந்தியத் துணைக்கண்ட சுதந்திரத்தின் மூலவராகிய காந்தியடிகள், ஒரு சிறந்த அரசியல்வாதி மட்டுமல்ல, ஆன்மிகத் துறையிலும் ஒப்பற்ற முறையில் உயர்ந்து விளங்கியவர். அவரை இந்தியர்கள் மட்டுமல்லாது—அகில உலகத்தினரும் தந்தையென போற்றி மகிழ்ந்தனர், மகிழ்கின்றனர். அத்தகையவரோடு அறிஞர் அண்ணாவையும் ஒப்பிட்டுக் கூறுவது சாலப் பொருத்தம் என்றே கருதுகிறேன். மகாத்துமாவோடு எல்லாத் துறைகளிலும் ஒப்பிட்டு நோக்க முடியாது என்பதைப் பலர் எதிர்த்தாலும் சில துறைகளிலே மகாத்துமாவோடு ஒப்பிடக் கூடியவர் அறிஞர் 'அண்ணா' என்பதை யாராலும் மறுக்க முடியாது!

காந்தியடிகளை 'மகாத்துமா' என்று அழைப்பதை இழித்து, அத்தகைய சொல்லுக்கு அவர் உரியவர் அல்ல என்று 'சிராஜ் கஞ்ஜ்' மாநாட்டிலே ஒருவர் கூறியபோது, காந்தியடிகள் மீது பற்று கொண்டவர்கள் அதை எதிர்த்தனர். அதுபோது காந்தியடிகள் 'சிராஜ் கஞ்ஜ்' மாநாட்டில் என் பெயரைப் பற்றி நிகழ்ந்த நிகழ்ச்சி எனக்கு வருத்தத்தைத் தருகிறது. 'மகாத்துமா' என்னும் பெயரால் நான் அழைக்கப்படவேண்டும் என்னும் பித்துடையவர்கள், அந்தப் பெயரால் என்னை அழைக்க விரும்பாத ஒருவரை அப்பெயரால் என்னை அழைக்குமாறு வலியுறுத்தியது தவறு. அவர் எனக்காவது என் கொள்கைக்காவது நன்மை செய்பவர் அல்ல. வலியுறுத்தலினால் அப்பெயரை சொல்வதைப் பார்க்கிலும் மாநாட்டை விடுத்து விலகுவது நல்லது என்று விலகிய அறிஞர் உறுதியைப் பாராட்டுகிறேன். என்னைக் குருட்டுத்தனமாகப் போற்றுகின்றவரைப் பார்க்கிலும் அவரே எனக்குரியவர் எனக் கருதுகிறேன்-என்று கூறி தனக்காக வாரிசு பேசியவர்களை வன்மையாகக் கண்டித்தார்.

கடந்த 1957 பொதுத் தேர்தலின் போது, பெரியாரும் அவரது கழகத் தோழர்களும் ஏனையோரும் அண்ணாவையும் அவரது கழகத்தையும் தாக்கி கீழ்த்தரமான முறையில் இழித்தும், பழித்தும் பேசிய நேரத்தில் தனது பத்திரிகையான திராவிட நாடு ஏட்டிலே "இழிமொழி பொழிந்து இன்பம் காணும் பெரியீர்! தூற்றலைத் தொண்டர்களாக்கிக் கொண்ட தூயவர்களே, ஏசுங்கள்! ஏசுங்கள்!! உங்கள் நா வரலும் மட்டும் பேசுங்கள். அப்பொழுதுதான் சூடு, சுரணை, சூழ்நிலை ஆராய்தல் மக்களிடம் நடந்துகொள்ளும் பண்பு ஆகியவைகள் எங்களுக்கு ஏற்படும்"—என்று தனக்கே உரித்தான அரசியல் நாகரிகத்தோடு எழுதியது 'மட்டுமல்லாமல் யாரும் எனக்காகப் பரிந்து கொண்டு எந்தவித தாக்குதல் மொழிகளையும் கையாளக் கூடாது எனக் கழகப் பேச்சாளர்களுக்கு உத்திரவிட்டதையும் நாடறியும்.

"குடியைக் கெடுப்பதும் மதியை இழக்கச் செய்வதுமான மதுவை நான் பெரிதும் வெறுக்கிறேன். அதுபோன்று சுதந்திர இந்தியாவிலும் மது இருக்காது"—என்று காந்தியடிகள் கூறிய அந்த நற்கொள்கையை அறிஞர் அண்ணாவும் ஆதரிக்கத் தவறவில்லை. முன்னாள் காவல் துறை அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள், மதுவிலக்கு தண்டனை அதிகரிப்பு நகல் சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டுவந்த போது அதைப்பற்றிய விவாதத்திலே அண்ணா அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகின்ற போது "இச்சட்டம் தேவையானது இதை நாங்கள் வரவேற்கிறோம், அரசாங்கம் விரும்பினால் எங்களால் இயன்ற உதவிகளைக் கூட செய்யத் தவறமாட்டோம். நானும் கலைவாணர் அவர்களும் 'நல்லதம்பி' சினிமாவின் மூலம் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்திருப்பது போல அரசாங்கம் கூட செய்திருக்க முடியாது"-எனச் சுட்டிக் காட்டி தனக்கு மதுவிலக்கு கொள்கை மீது இருக்கிற பற்றை விளக்கினார் அண்ணா.

"என்னைச் சூழ்ந்துள்ள ஒவ்வொன்றும் மாறுதல் அடைவதையும் மாள்வதையும் நான் காண்கிறேன். இந்நிகழ்ச்சிகளுக்கு ஒரு நிலைக்களன் வேண்டுமன்றோ? அதுதான் கடவுள். அஃது என்றும் ஒரு தன்மையுடைய சக்தி, அதற்கு மாறுதலோ அழிவோ கிடையாது"—என்று கூறியதின் மூலம் தெய்வத்தைப் பற்றிய தனது விளக்கத்தை, காந்தியடிகள் தெளிவுபடுத்திக் காட்டினார்கள்' அண்ணாவோ, "கருணாநிதியைத் தேடிக்கொண்டு வருபவர் அன்பழகனைப் பார்த்து இவர்தான் கருணாநிதியா என்றால் 'இல்லை' என்கிறோம். அடுத்து ஆசைத்தம்பியைப் பார்த்து இவர்தான் கருணாநிதியா என்றால், 'இல்லை' என்கிறோம்--இப்படிக் கூறுவதினால் கருணாநிதியே இல்லை என்றா பொருள்? இதுபோலத்தான் நாங்களும் புராணத்தின் பேரால் இருக்கின்ற ஆபாசத்தைத்தான் வெறுக்கிறோமே தவிர கடவுளை அல்ல—என்று தெளிவாக பொதுக்கூட்டம் ஒன்றிலே குறிப்பிட்டது மட்டுமல்லாமல் மேலும் "தூய உள்ளமே கோயில், நலிந்தோரை தேற்றுவதே தோத்திரம் மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த பூசை. ஏழைகள் இதயத்தில் களிப்பூட்டும் பணி புரிதலே பகவானுக்குத் தேர் திருவிழா யாவும்."—என்று சொல்லி இருப்பதிலிருந்தும், கடவுள் கொள்கையின் அடிப்படையில் காந்தியும் அண்ணாவும் ஒன்றுபட்டவர்கள்தான் என்பதை நம்மால் உணர முடிகிறது.

"மனுஸ்மிருதியைப் படித்தல் நேர்ந்தது. அதன் கண் உலகத் தோற்றத்தைப் பற்றியும் அதையொட்டி பிறவற்றைப் பற்றியும் கூறியுள்ள ,பகுதிகளில் எனக்கு நம்பிக்கை விழவில்லை. அந்நூலை படித்ததின் பயனாக சிறிது நாத்திக உணர்வுகூட அரும்பிற்று" என்று காந்தியடிகள் அந்நூலைப் பற்றி தான் கொண்ட கருத்தை வெளிப்படையாகக் கூறியதிலிருந்தும் "அறிவுக்குப் பொருத்தமில்லாத கருத்துக்களை கொண்டுள்ள நூல்கள் மக்களிடையே மடமை இருளை உண்டாக்குவதால் அத்தகைய நூல்களை விலக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் தீர்க்கமாகத் தன்னுடைய கருத்தை வெளியிடுவதிலிருந்தும் இருவரும் ஒரே நோக்குடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

மகாத்துமா தாய்மொழியில் மிகுந்த பற்றுள்ளவர் என்பது, நிகழ்ச்சி ஒன்றின் மூலம் தெரிய வருகிறது. நீண்ட நாட்களாக வெளி நாட்டில் வாழ்ந்து திரும்பிய காந்தியடிகளுக்கு முதல் முறையாக ஒரு வரவேற்பு கொடுக்கப்பட்டது. வரவேற்புரை வழங்கியவர்கள் ஆங்கிலத்திலேயே தனக்கு வரவேற்புரை அளித்திருந்தும் தனது தாய்மொழியாகிய கூர்ஜரத்திலேயே நன்றி கூறினார். இத்தகைய காந்தியின் மொழிப் பற்றுக்கு சமமானதே நமது அண்ணாவின் மொழிப்பற்றும்.

ஆங்கிலத்தில் போதுமான புலமையை பெற்றிருந்தும் அண்ணா அவர்கள் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே பயன்படுத்துவதிலிருந்தும், ஒரு சமயம் கல்லூரி ஒன்றிலே தமிழில் பேசிக்கொண்டிருந்தபோது கூட்டத்திலிருந்த மாணவர்கள் அண்ணா அவர்களை ஆங்கிலத்தில் பேசும்படி வற்புறுத்தியும், கேளாமல், தமிழின் சிறப்பைப் பற்றி சில வார்த்தைகள் ஆங்கிலத்திலே கூறிவிட்டு தாய் மொழியாகிய தமிழிலே மீண்டும் பேசி நமது அன்னை மொழியாம் அருந் தமிழுக்கு சிறப்பளித்தார் அண்ணா.

கிராமத்தையும் கிராம மக்களையும் பற்றி அண்ணல் காந்தியடிகள் என்ன எண்ணிக் கொண்டிருந்தாரோ, அதையே அறிஞர் அண்ணா அவர்களும் கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சி மன்றங்களுக்கான மசோதாவின் மீது 1957 சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது அண்ணா அவர்கள் கலந்துகொண்டு, காந்தியாரின் கிராம சுய ராஜ்யத்தை வலியுறுத்தி, அதிக அளவில் கிராம மக்களுக்கு மனக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்கவேண்டும். போதுமான உரிமைகள் கிராம மக்களுக்கு அளிக்கவேண்டும். உரிமைகள் பறிக்கப்படுவது முறையாகாது என்று கூறினார்.

"தேசத்தின் வாலிபர்களிடத்தில்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். சூதறியாத இளம் வாலிபர்கள் விலையற்ற பொக்கிஷங்கள். கண நேரத்தில் தோன்றி மறையும் உணர்ச்சிகளுக்கும் சுகபோகங்கள் என தப்பிதமாக அழைக்கப்படும் காரியங்களுக்கும் இரையாகித் தேய்ந்து விடக் கூடாது"—என்பதை வலியுறுத்தி அவர்களின் நல்லிதயங்களிலே உயர்ந்தக் கருத்துக்களை பதிப்பிக்க காந்தியடிகள் மிகவும் பாடுபட்டார்.

"வாழ்க்கை என்னும் பொய்கையிலே விசாரம் என்னும் நஞ்சு கலக்கப்படாத பருவம், வாலிபம், பகுத்தறிவு என்னும் பகலவன் எரிபட்டு விஷ பூச்சிகள் போன்ற சுயநல சுக கருத்துக்கள் அழிக்கப்பட்டிருக்கும் தூய்மையான உள்ளங்களிலேதான் எந்த நல்லக் கருத்தும் நிலைக்கும்." என்று கூறியதோடு அவர்களி

(6-ம் பக்கம் பார்க்க)

### சென்ற இதழில்...

ரோம் நகரில் அண்டோனியும்—சீசரும் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, 'நமது இருவருக்கும் இருந்த ஒப்பந்தத்தின்படி நீ எனக்கு உதவி செய்யாமல் இருந்து விட்டாய்' என்று அண்டோனியின் மீது குற்றம் சாட்டுகிறான்—சீசர்.

அக்ரிப்பா ச்சருக்கு ஒரு தங்கை இருப்பதை நினைவுபடுத்தி அண்டோனிக்கு அவளை திருமணம் செய்து வைத்துவிட்டால் இருவரிடமும் நட்பை ஏற்படுத்தலாம் என்று எண்ணி அதை வெளியிடுகிறான். அண்டோனியும்—சீசரும் அதற்கு இணங்குகின்றனர்.

வ்னோபார்பசுர், அக்ரிபாவும் அண்டோனி கிளியோபாட்ராவின் மீது கொண்டுள்ள காதலை மறக்கும்படி செய்வதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

○

### காட்சி 3.

[ரோம் நகரம். சீசரின் மாளிகையில் ஓர் அறை.

[சீசர், அண்டோனி அவர்கள் நடுவே ஆக்டேவியா, பணியாட்கள், ஒரு நிமித்திகன் வருகின்றனர்.]

அண்டோ: நான் வகிக்கும் பதவியும், உலகத்தின் நிலையும் உன் மடியிலிருந்து என்னை இழுத்து சிலகாலம் பிரித்து வைக்க சதி செய்கிறது.

ஆக்டே: நீங்கள் பிரிந்திருக்கும் காலம் வரை உங்களுக்குப் பக்கத் துணையாக இருக்க கடவுளை வேண்டிக்கொண்டே இருப்பேன்.

அண்டோ: நல் இரவு, ஐயா! என்னருமை ஆக்டேவியா, என்னைப்பற்றி உலகம் கூறும் குற்றங்களை நீ கேட்காதே! என் கையில் எதுவும் நான் வைத்திருக்கவில்லை. எல்லாம் அதன்படியே நடக்கும் இரவு வணக்கம் அன்பே!

ஆக்டே: இரவு வணக்கம்! அன்பரே!

சீசர்: இரவு வணக்கம்! ஐயா!

[சீசரும், ஆக்டேவியாவும் போகின்றனர்.]

அண்டோ: என்ன, ஐயா? எகிப்திலேயே இருக்க விரும்புகிறாயா?

நிமித்: அங்கிருந்து நாம் வந்தே யிருக்கக் கூடாது!

அண்டோ: ஏன்?


நிமித்: விரைவில் நீங்கள் அங்கு செல்வீர்கள் என்று உணருகிறேன் நான்.

அண்டோ: சீசர், நான் இருவரில் யார் மிகவும் அதிர்ஷ்டசாலி?

நிமித்: சீசர். ஆதலால், அண்டோனி யாரே அவருடன் இருக்காதீர்கள். தங்களுடைய ஆவி அல்லது உள்ளுணர்வு வீரம் நிறைந்தது, தைரியம் மிக்கது, உயர்ந்தது, ஈடுஇணையற்றது, மேன்மையானது. ஆனால் சீசருடையது அது போன்று இல்லை. ஆனால் அவருடன் இருந்தால் தங்கள் உள்ளுணர்வு சோபிக்காது, மங்கிவிடும். ஆதலால் நீங்கள் அவசியம் அவரைப் பிரிந்திருக்கவேண்டும்.

அண்டோ: மேற்கொண்டு பேசாதே, இதை.

நிமித்: யாரிடமும் அல்ல. தங்களிடம் மட்டும் தான் பேசுவேன். அவருடன் எந்த முயற்சியில் இறங்கினாலும் தாங்கள் தோற்பது உறுதி. அவர் எதிரே தங்கள் பெருமை பிரகாசிக்காது. எனவே பிரிந்திருப்பது நல்லது.




அண்டோ: போதும்; நீ போ. போய், வென்டிடியசை அனுப்பு; பேசவேண்டும்.

[நிமித்திகன் போகிறான்.]

பார்த்தியாவுக்கு போகவேண்டும் அவர். —எதுவோ அவன் சொல்வது உண்மை தான். அவர் எதிரில் என் புகழ், வீரம் எல்லாம் மங்கிவிடுகிறது. நான் எகிப்திற்கு போகவேண்டும். இந்தத் திருமணம் அமைதிக்காகத்தானே செய்துக்கொண்டேன். அவளுடைய அதிர்ஷ்டத்தின் முன் என் கூர்ந்த மதிகூட கூர் மழுங்கி விடுகிறது. சூதாட்டக்காய் சீசர் சொல்படிதானே நடக்கிறது,

[வென்டிடியஸ் வருகிறான்.]

என் இன்பம் கிழக்கில்தான் கிடக்கிறது. ஓ...! வா! வென்டிடியஸ். நீ பார்த்தியா போகவேண்டும். உன் கட்டளைகள் தயாராக இருக்கின்றன. என்னுடன் வந்து, அவற்றை வாங்கிக்கொள்.

[இருவரும் போகின்றனர்.]

### காட்சி 4

[அதே இடம். ஒரு தெரு;
லெபிடஸ், மாசினஸ், அக்ரிப்பா வருகின்றனர்.]

லெபி: மேற்கொண்டு உடலை அலட்டிக் கொள்ளாதீர்கள்; தயதுசெய்து விரைவாக உங்கள் தலைவர்களைப் பின்பற்றுங்கள்.

அக்ரி: ஐயா! மார்க் அண்டோனி ஆகடேவியாவை முத்தமிட்டுவிட்டு வருவார்; நாங்கள் பிறகு போகிறோம்.

லெபி: உங்களை இராணுவ உடையில் பார்க்கும்வரை என் வணக்கம்; சென்று வாருங்கள்.

மாசி: செல்கிறோம், லெபிடஸ். தங்களுக்கு முன் நாங்கள் மிசினம் மலையில் இருப்போம்.

லெபி: உங்கள் வழி குறுகலானது. எனது வழி பெரியது; இரண்டு நாள் முன்னர் நீங்கள் சென்றுவிடுவீர்கள்.

மாசி; அக்ரி: ஐயா! வெற்றியுண்டாகுக. வணக்கம்!

லெபி: வணக்கம்.

[எல்லோரும் போகின்றனர்.]

ஃ

### காட்சி 5

[அலெக்சாண்டிரியா அரண்மனையில் ஓர் அறை.

கிளியோபாட்ரா, சார்மியான், ஐராஸ், அமெக்சாஸ் நுழைகின்றனர்.]

கிளியோ: எனக்கு இன்னிசைவேண்டும்; இன்னிசை, இன்பம் தரக்கூடிய மது, காதலின் மயக்கத்திலே கட்டுண்ட காதலர்களுக்கு!

பணியாள்: இன்னிசை! ஓ!

[மார்டியான் வருதல்]

கிளியோ: அதை அப்படியே விட்டுவிடு. சதுரங்கம் ஆடலாம் வா, சார்மியான்.

சார்: என்னுடைய கைகள் வலியெடுக்கின்றன. மார்டியானுடன் விளையாடுங்கள்.

கிளியோ: ஒரு பெண்ணுடன் விளையாடுவது போன்றதுதான் ஒரு பேடியுடன் விளையாடுவதும்! வா, விளையாடலாம்!

மார்: என்னால் இயன்ற அளவு விளையாடுகிறேன் அம்மா!

கிளியோ: சிறியதா யிருந்தாலும் நல்ல பண்பு காட்டினால் நடிகன் மன்னிப்பு கேட்பான். என்னிடம் ஒன்றுமில்லை இப்பொழுது — என்னுடைய தூண்டிலைக்

கொடுங்கள். நதிக்குப்போகலாம் வாருங்கள். ஒரு பக்கம் பாங்குடன் பணியாட்கள் பண்ணிசைக்க, நான் மீன்களைப் பிடிப்பேன். என் தூண்டிலில் இருக்கும் வளைவான கொக்கி அச்சிறு மீன்களின் வாயைக் கிழித்துவிடும். ஒவ்வொன்றாகப் பிடித்து நீரினின்று எடுக்கையில் அவற்றை ஒவ்வொரு அண்டோனியாகக் கருதுவேன்; பின் ஆகா! ஆகா! உன்னைப் பிடித்துவிட்டேன் என்று கூவுவேன்.

சார் : நீங்கள், தூண்டில் பிடித்து துல்லியமான நீரில் மீன் பிடிப்பதைக் காண மிக்க மகிழ்ச்சியாயிருக்கும். உப்பு மீன் ஒன்று உங்கள் கொக்கியில் சிக்கி துடிப்பதைக் கண்டு நீங்கள் களிப்பது காணக்கூடிய காட்சியா ?

கிளியோ : அந்தக் காலம்! ஓ காலம்! ஒருநாள் நான் கிண்டல் செய்து சிரித்து அவரது பொறுமையை போக்கினேன். மற்றொருநாள் நான் சிரித்து அவருக்கு சிருங்காரம் ஊட்டி பொறுமைமை அளித்தேன். மறுநாள் மதுவூட்டி அவரை மஞ்சத்தில் கிடத்தி கொஞ்சிக் கிடந்தேன். என்னுடைய உடைகளை அவருக்கு அணிவித்து அழகு பார்த்தேன். அவருடைய 'பிலிப்பான்' வாளை நான் எடுத்து சுழற்றினேன். என் சுட்டு விரல் அசைவுக்கு அவர் சுந்தரமுகம் பணியும்; அவரை நான் எப்படியெல்லாம் ஆட்டி வைத்திருக்கிறேன். அதை அளவிட்டு கூறமுடியுமா? ஓ! இத்தாலியினின்று வருகிறாய்;

[தூதனொருவன் நுழைகிறான்]

உன்னுடைய நற்செய்திகளை என் செவி கேட்டு சிறப்புறட்டும். வெகுநாட்களாக ஒன்றுமில்லாதிருந்தேன்.

தூதன் : அம்மா! அம்மா!

கிளியோ : என்ன அண்டோனி இறந்துவிட்டாரா?—அப்படி ஏதேனும் நீ சொன்னால், கயவனே, என்னைக் கொன்றவனாவாய். நல்ல சேதி நீ சொன்னால் நிறைய பொன் உண்டு உனக்கு, நங்கை என் நளினமான கரங்களில்—சாம்ராஜ்யங்கள் பல கண்ட வீராதி வீரர்கள் கூட நடுங்கும் கரங்களால் பற்றிய என் கரங்களில்—முத்தமிடலாம் நீ.

தூதன் : முதலில், அவர் நன்றாக யிருக்கிறார்.

கிளியோ : சரி. நிறைய பொன்னுண்டு! ஆனால் ஐயா உஷாராக கவனிக்க வேண்டும். ஏன் என்றால் இறந்தவர்களைக்கூட நன்றாக யிருக்கின்றார்கள் என்று கூறுகிறோம். அப்படிக்கூறத்தான் நீ இப்படி ஆரம்பித்தாய் என்றால் என்னிடம் இருக்கும் பொன்னை உருக்கி உன் உளுத்துப்போன தொண்டையில் ஊற்றச் செய்வேன்.

தூதன் : நல்ல அம்மையாரே! நான் சொல்வதைக் கேளுங்கள்.

கிளியோ : சரி, சொல் கேட்கிறேன். உன்னுடைய முகத்தில் நல்ல சேதிக்கு அறிகுறி ஏதும் காணோம். அண்டோனி நன்றாகவும், சுதந்திரமாகவும் இருக்கிறார் என்றால், ஏன் முகம் செத்தவன் முகம் போன்று சத்தற்றிருக்க வேண்டும். அவர் அப்படி நன்றாக யில்லாதிருந்தால் நீ புயலின் வேகத்தில், தலையில் பாம்புக் கிரீடம் வைத்திருப்பவன் நடுங்கி ஓடுவதைப்போன்று வேகமாகவல்லவோ வந்திருக்கவேண்டும்.

தூதன் : தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள்.

கிளியோ : உன்னை அடித்துப்போட விழைகிறேன். ஆனாலும் நீ அண்டோனி நலமாக வுள்ளார் என்று நவின்றால் பிழைத்தாய். சீசரும் அவரும் எப்படி? நல்ல சேதிக்கு நன்முத்தும், மின்னும் பொன்னும் உண்டு.

தூதன் : அவர் நன்றாகத்தானிருக்கிறார்.

கிளியோ : நன்றாகச் சொன்னாய்.

தூதன் : சீசருடன் நட்பு கொண்டிருக்கிறார் நல்லபடி.

கிளியோ : உண்மையான தூதன் நீ.

தூதன் : முன்னைவிட நல்ல நண்பர்களாகி விட்டார்கள் சீசரும், அவரும்.

கிளியோ : மிக மிக நல்லவன் நீ.

தூதன் : ஆனால் ... ... ... ...

கிளியோ : இந்த ஆனால் எனக்குப் பிடிப்பதில்லை. சுவையைக் கெடுக்கிறது இந்த ஆனால். தயவுசெய்து நல்லதோ கெட்டதோ எந்தச் சேதியானாலும் சொல். சீசரிடம் நட்புகொண்டிருக்கிறார், நன்றாகயிருக்கிறார், இன்னும் சுதந்திரமாக ... ...

தூதன் : இல்லையில்லை! அப்படி நான் சொல்லவில்லை. அவர் ஆக்டேவியாவிற்குக் கட்டுப்பட்டிருக்கிறார்.

கிளியோ : எதற்கு ?

தூதன் : மனைவிக்குக் கட்டுபடாதவன் யார். இல்லையேல் படுக்கையில் மகிழ்ச்சியிருக்காதே!

மூலம் :

**சேக்ஸ்பியர்**

தமிழில் :

**இரா. மதனகோபால்**

பி.காம்.டி.ஐ.பி.

கிளியோ : சார்மியான் பெரிய அதிர்ச்சி

தூதன் : திருமணமாகிவிட்டது ஆக்டேவியாவிற்கும், அண்டோனிக்கும்.

கிளியோ ; கூறத்தகாத நோய் உன்னைப் பற்றிக் கொள்க! கொடியவனே!

[அவனை அடிக்கிறாள்]

தூதன் : அமைதி! பொறுமை !

கிளியோ : என்ன சொன்னாய் தீயவனே! கொடியவனே !

[மறுபடியும் அவனை அடிக்கிறாள்]

கம்பியினால் அடிக்கவேண்டும் உன்னை, உப்பு நீரில் கொதிக்க வைக்கவேண்டும், கட்டிப் போட்டு உதைக்கவேண்டும். உன் கண்களை குத்தி விடுகிறேன். உன் தலைமயிரைப் பிடுங்குகிறேன்.

[அவனைக் கெட்டியாகப் பிடித்து மேலும் கீழுமாக உலுக்குகிறாள்.]

உன்னை உயிரோடு புதைக்கவேண்டும்.

தூதன் : மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா! சேதியைத்தான் நான் கொண்டு வருகிறேன்.

கிளியோ : அப்படியில்லை என்று சொல்லு. உனக்கு பொன், பொருள் ஏன் சிறிய நகரமே தருகிறேன்.

தூதன் : அவருக்கு மணமாகிவிட்டது.

கிளியோ : என்ன சொன்னாய், சண்டாளா !

[கத்தியைக் கையில் எடுக்கிறாள்]

தூதன் : அப்படியானால் நான் போகிறேன். என்ன செய்கிறீர்கள் ? நான் என்ன செய்தேன்?

[விரைவாகச் சென்று விடுகிறான் தூதன்]

சார் : அம்மா! உங்கள் நிலையை நீங்கள் உணருங்கள். அவன் என்ன செய்வான் குற்றமற்றவன்.

கிளியோ : குற்றமற்றவர்கள் கூட புயலால் இறக்கின்றனர். நைல் நதியில் எகிப்து உருகட்டும். இங்குள்ள எல்லோரும் பாம்புகளாக மாறட்டும். அவனை மறுபடியும் கூப்பிடு. பைத்தியம் பிடித்திருந்தாலும் இனி அவனை நான் அடிக்க மாட்டேன்.

சார் : அவன் வருவதற்கு பயப்படுகிறான்.

கிளியோ : அவன் வரட்டும். நான் ஒன்றும் செய்யமாட்டேன். வரட்டும் அவன். வா.

[மறுபடியும் தூதன் வருகிறான்]

உண்மையைக் கூறு. கெட்ட சேதிகள் கொண்டு வருவது எப்பொழுதும் ஆபத்து.

தூதன் : நான் என்ன வேலையைச் செய்தேன்.

கிளியோ : அவருக்கு திருமணமானதா? நீ அதை சொல்வதில் தடையேதுமில்லை.

தூதன் : ஆம் திருமணமாகி விட்டது!

கிளியோ : உண்மையாகவா ?

தூதன் : நான் ஏன் பொய் சொல்கிறேன்.

கிளியோ ; சொல்லுவாசி. பாதி எகிப்து நீரில் மூழ்கிவிட்டது. பாம்புகள் வாழுமிடமாகி விட்டது. இங்கிருந்து போ. உன் முகத்தைக் காணக்கூட வெறுக்கிறேன். அவருக்கு மணமாகி விட்டதா?

தூதன் : குற்றமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். தங்கள் மனதை நோகச்செய்யும் நோக்கம் எனக்கில்லை. நான் என் வேலையைச் செய்ததற்கு ஆராயாமல் அடித்தீர்கள். உண்மையாகவே அவர் ஆக்டேவியாவை மணந்துக் கொண்டார்.

கிளியோ : உம். அப்படியா. சரி போ.

[தூதன் போகிறான்]

சார் ; நன்று இராணி. பொறுமையைக் கடைபிடித்தீர்கள்.

கிளியோ : அண்டோனியை புகழுகையில் சீசரை இகழ்ந்தேன்.

சார் : ஆம். பல தடவைகள்.

கிளியோ : அதற்கு சரியான கைம்மாறு. இங்கிருந்து என்னை அழைத்துப் போங்கள். எனக்கு மயக்கம் வரும் போலிருக்கிறது. ஓ! ஐராஸ், சார்மியான்—பரவாயில்லை. அலெக்சாஸ் நீ போ. போய் ஆக்டேவியாவின் அழகைப்பற்றி அறிந்து வா, அவள் வயது என்ன என்பதும் தெரிந்து வா. அவள் விருப்பங்களையும் அறிந்துகொண்டு வா. அவள் தலைமயிரின் நிறம் என்ன என்பதுகூட விட்டு விடாமல் அவள் அழகு முழுதும் அறிந்து வந்து என்னிடம் முழுதும் சொல். விரைவாகப் போய் வா.

[அலெக்சாஸ் போகிறான்]

போகட்டும் அவன் [மார்டியானை நோக்கி] அவள் எவ்வளவு உயரம் என்பதும் அறிந்து வா. சார்மியான் என் மீது அனுதாபம் காட்டு. ஏதும் பேசாதே என்னை அழைத்துப் போ என் அறைக்கு.

[அவளை அழைத்துக்கொண்டு செல்கின்றனர்]

[தொடரும்]

# மாறன் - மல்லிகா மண விழா

—(0)—

## சர்வ கட்சியினரும் வாழ்த்தினர்

○

கழகப் பொருளாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நண்பர் கலைஞர் கருணாநிதி அவர்களின் மருமகனும் அருமைத் தோழருமான முரசொலி மாறன் அவர்களுக்கும், குடந்தை கல்யாணசுந்தரம் எம். ஏ. அவர்களின் செல்வி மல்லிகா அவர்களுக்கும் 15—9—63 அன்று காலை 9 மணிக்கு விழாக்கோலம் பூண்டிருந்த சென்னை ஆபட்சுபரி மண்டபத்தில் திருமணம் சீரும் சிறப்புற நடந்தேறியது. சர்வகட்சித் தலைவர்களும் கழகத் தோழர்களும், கலைத் துறையினரும் ஆயிரக்கணக்கில் வருகை தந்து மணமக்களை மனமார வாழ்த்தினர்.

14—9—63 மாலையிலும், 15—9—63 காலையிலும் நாயன வேந்தர் குளிக்கரை எஸ். பிச்சையப்பா குழுவினரின் நாதசுர இசை விருந்து நடைபெற்றது.

அழகிய ஆபட்சுபரி மண்டபத்தில் காலை 9 மணிக்கு மணமக்கள் மாறன்—மல்லிகா ஆகியோர் வந்தமர்ந்தனர். தொடர்ந்து அறிஞர் அண்ணா அவர்களும், கழக முன்னணித் தோழர்களும், பிற கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் வந்தமர்ந்தனர்.

கலைஞர் கருணாநிதி அனைவரையும் மனமார வரவேற்றுப் பேசியதுடன் அண்ணா அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார். இசைச் சித்தர் சிதம்பரம் செயராமன் வழிமொழிந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் மாறன் அவர்களின் அறிவாற்றலைப் பாராட்டியதுடன் செல்வி மல்லிகாவுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்துமாறு இதயபூர்வமாக வாழ்த்தினார்.

அடுத்து திரு. அமைச்சர் பக்தவத்சலம், அமைச்சர் ஜோதி வெங்கடாசலம், புரட்சி நடிகர் எம். ஜி. இரமச்சந்திரன், சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி கணேசன், நடிகவேள் எம். ஆர். இராதா, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, ராஜா சர் முத்தைய(செட்டியார்), சி. இராஜகோபலாச்சாரியார், ம. பொ. சிவஞானம், எஸ். குருசாமி கவிஞர் கண்ணதாசன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், அப்துஸ்சமத், சென்னை மேயர் குசேலர்; சௌந்திரம் கைலாசம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், பொற்செல்வி இளமுருகு, சத்தியவாணி முத்து, எ. கே. வேலன், தஞ்சை இராமச்சந்திரன், டைரக்டர் சாமி, வி. கே. இராமசாமி (முதலியார்) என். சிவராஜ், இரா. தருமலிங்கம், எ. கோவிந்தசாமி, கே. ஏ. மதியழகன், சி. பி. சிற்றரசு, கே. கே. நீலமேகம், எஸ். எ, அய்யாச்சாமி(செட்டியார்), எஸ். எஸ். தென்னரசு, எஸ். முத்து, எஸ். எ. ராசமாணிக்கம்: தில்லை வில்லாளன், ப. உ. சண்முகம், எம். பி. வடிவேல், அம்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி, இரா. சாம்பசிவம், சி. வி. எம். அண்ணாமலை, நீலநாராயணன், காஞ்சி கல்யாணசுந்தரம், வி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எஸ். மணி எம். சண்முகம், எம். செல்வராஜ் டி. சண்முகம், வி. பி. இராமன், அ. க. தங்கவேலர், ஏ. பி. ஜனார்த்தனம், இரா. இளம்வழுதி டி. வி. நாராயணசாமி, என். வி. நடராசன், அன்பு கணபதி, நாவலர் நெடுஞ்செழியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி பேசினர்.

அடுத்து மணமக்களுக்கு ஏராளமான அன்பளிப்புகளும் வாழ்த்துகளும் அளிக்கப்பட்டன. பின்னர் விருந்து நடைபெற்றது.

பிற்பகல் 4-30 மணிக்கு, நாதசுர வித்வான் சின்ன ஷேக் மௌலா குழுவினரின் நாதசுர இசை நிகழ்ச்சியும், 6-30 மணிக்கு, இசைப் பெருங்கோ மதுரை சோமசுந்தரம் குழுவினரின் இசைவிருந்தும், 9-மணிக்கு பாரதக்கலை இளவரசிகள் சாயி-சுப்புலட்சுமி குழுவினரின் நடனமும், 11-மணிக்கு மணமகன் முரசொலி மாறன் தீட்டிய ‘வஞ்சியும் காஞ்சியும்’ என்ற ஓரங்க நாடகமும் இனிதே நடைபெற்றது.

மணவிழாவில் இசைவிருந்து அளித்த எல்லா கலைஞர்களுக்கும் வருகை தந்திருந்த அனைவருக்கும் மணமக்கள் சார்பில் கலைஞர் கருணாநிதி நன்றி கூறினார்.

பிற்பகல் நிகழ்ச்சிக்கு, அமைச்சர் சர்க்கரை மன்றாடியார், தமிழக சட்டமன்றத்தலைவர் செல்லபாண்டியன் உள்ளிட்ட பல பிரமுகர்களும், கலைத்துறையினரும், கழகத் தோழர்களும் ஏராளமாக வந்திருந்து சிறப்பித்தனர்.

மற்றும் பலவித சிறப்புகளுடன் மாறன்—மல்லிகா திருமணம் இனிதே நடைபெற்றது.

வாழ்க மல்லிகா—மாறன்.

●

3-ம் பக்கத் தொடர்ச்சி

டையே, அறிவுப் பிரச்சாரம் செய்தார் அண்ணா. இதன் விளைவே மாணவர் உலகத்தையும் வாலிபர்களின் முகாமையும் தன்பால் ஈர்த்துக் கொண்டிருப்பது.

**“அரசியற் போராட்டத்திற்கு அகிம்சையே சிறந்த வழி, நியாயமான அறப்போருக்கு தோல்வி என்பதே கிடையாது, அகிம்சையினால் உலக வல்லரசுகளையே அடக்கிவிட முடியும் என்பது என் திடமான நம்பிக்கை. எனவே அகிம்சை வழி சென்று சுதந்திரம் அடைய வேண்டும்”**—என்று காந்தியடிகள் கூறினார். அதன்படியே, பின்னால் இந்தியத் துணைக் கண்டத்தை வெள்ளை ஏகாதிபத்தியத்தில் இருந்து மீட்டார்.

தாயகத்தை விடுவிக்க, வேட்டு முறை, ஒட்டு முறை, ஓட்டு முறை என மூன்று முறைகளே உள்ளன. பலாத்காரம் என்பது இரு பக்கமும் கூர் உள்ள வாள், அது குத்துவதற்கு மட்டுமல்ல, அதை ஏந்திச் செல்பவனுக்கும் கேடுகளை உண்டாக்கக் கூடும், ஆகவே பலாத்காரம் வேண்டாம் என அந்த வேட்டு முறையைத் தள்ளிவிட்டோம். ஒட்டு முறை இன்னொரு வளர்ந்த கட்சியோடு சேர்ந்துக்கொண்டு கிளர்ச்சி செய்வது அதையும் வேண்டாம் என விட்டு விட்டோம். ஓட்டு முறையையே விரும்புகிறோம். அகிம்சையை பின்பற்றி சனநாயக முறையில் மக்களின் வாக்குகள் மூலம் நாம் வெற்றி பெறவேண்டும்” என்று கோபி மாநாட்டில் கூறி அகிம்சா முறையில் தமக்கிருக்கின்ற நம்பிக்கையை அறிஞர் அண்ணா அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

“காங்கிரஸ் விரும்பும் சுயராஜ்யம் இங்கிலாந்து விரும்புமாறு கொடுக்கப்படுவதல்ல. அது தேசத்தார் விரும்பும் வண்ணம் தென்னாப்பிரிக்காவைப் போல பெறவேண்டுவது. **சுயராஜ்யம் கடவுளாலும் கொடுக்கப்படும் தகையது அல்ல; அதை நமக்கு நாமே முயன்று பெறல்வேண்டும். சுயராஜ்யம் என்னும் சொல்லியல்பே பிறர் கொடையில் இல்லை என்பதை குறிக்கும்”** என்று சுயராஜ்யத்தைப் பற்றி அழுத்தம் திருத்தமாக நம்பிக்கையோடு விளக்கி கூறினார் காந்தியார். அண்ணாவோ, தி. மு. க. விரும்பும் திராவிடநாடு சென்னை மாநில அமைச்சர்களோ அல்லது மத்திய அரசு அமைச்சர்களோ விரும்புமாறு தரப்படுவது அல்ல. திராவிடர்கள் எழுச்சிப்பெற்று அவர்கள் விரும்பி எடுத்துக்கொள்வதுதான் திராவிடத் தனி கூட்டாட்சி என்று கூறுகிறார்.

காந்தியார் முன்பு கூறியபோது, ‘கைராட்டைச் சுற்றிக்கொண்டே இருந்தால் சுயராஜ்யம் கிடைத்துவிடுமா?’ என்று ஏளனமாகக் கூறினார்கள். ஆனால், பின்னால் அவர் சுயராஜ்யம் பெற்றுகாட்டினார். அதேபோன்றுதான் அண்ணாவையும், ‘சினிமா கதை வசனம் எழுதிவிட்டால் திராவிட நாடு வாங்கிவிட முடியுமா?’ என்று கேட்கின்றனர். காந்தியோ இன்னல் பல பெற்று இலட்சியத்தில் வெற்றிபெற்றார். அண்ணா? .........இந்தக் கேள்விக்குறியின் இடத்தை பூர்த்திசெய்யத்தான் ஆயிரமாயிரம் தம்பிமார்களை தனது பாசறையிலே தயார் செய்து கொண்டிருக்கிறார் அறிஞர் அண்ணா—அந்த இடம், இன்று இல்லையேல் நாளை, அன்றும் இல்லையேல் நாளை மறுநாள் என்ற ரீதியிலே அந்த இடம் பூர்த்தியாகத்தான் போகிறது. காலத்தின் வளர்ச்சியில் கேள்விக்குறி ஆச்சரியக் குறியாக மாறத்தான் போகிறது.

## திருமண அழைப்பு

—(●)—

அன்புடையீர், வணக்கம்.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1994 புரட்டாசித் திங்கள் 6-ம் நாள் (22-9-63) ஞாயிறு காலை 8 மணிக்கு மணமகன் இல்லத்தில் (74-577 குசராத் அவுசிங் காலனி, கோக்ரா, ஆமதாபாத்-8)

எனது மகன் செல்வன் **செயபாலனுக்கும்**, பய்பூரா திரு. எஸ். கண்ணன் மகள் செல்வி **வேதவல்லிக்கும்** திருமண விழா திரு. எஸ். தியாகராசன் (பம்பாய் தி. மு. க. செயலாளர்) அவர்கள் தலைமையில் நடைபெறும் விழாவிற்குத் தாங்கள் சுற்றமும், நட்பும் சூழ வருகை தந்து சிறப்பித்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்,

**ச. சந்திரன்**

(ஆமதாபாத் தி. மு. க. அவைத்தலைவர்)

○

21—9—63 இரவு 8 மணிக்கு (பய்பூரா வழி) இலட்சுமி சங்கர்தாஸ் பங்களாவிலிருந்து மணப்பெண் ஊர்வலம்.

**பம்பாய், ஆமதாபாத் கழக முன்னணித் தோழர்கள் வாழ்த்துரை வழங்குவர்.**




# திருவாரூரில் நீதிக்கட்சி மாநாடும் மாநில நிர்வாகக்குழுத் தேர்தலும்!

**24**

1940-ம் ஆண்டு திருவாரூரில் நீதிக்கட்சியின் 15-வது மாநில மாநாடு நடைபெற்றது. அந் நாட்களில் நீதிக்கட்சியின் மாநில நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக இருந்து வந்தவர்கள், பெரும்பாலும் சர்—திவான் பகதூர், ராவ்பகதூர் போன்ற பட்டங்களைப் பெற்ற ''கனவான்கள்'' என்று அழைக்கப்படுபவர்கள் தானிருக்க முடிந்தது.

அண்ணா அவர்களுக்கே, நிர்வாகக் குழுவில் இடம் தருவதென்பது அந்த 'கனவான்'களின் ''தரம்'' குறைந்துவிடும் என்று கருதப்பட்டு வந்ததென்றால் மற்றவர்களைப்பற்றி கூறவும் வேண்டுமோ!

இன்னும் சொல்லப்போனால் அன்றைய நாட்களில் இயக்க வளர்ச்சிக்காகத் தங்களது அரிய உழைப்பினைத் தந்த அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, எஸ். வி. லிங்கம், பொன்னம்பலனார் போன்றவர்களுக்குக் கூட நிர்வாகக் குழுவில் இடமில்லாதது மட்டுமல்ல, அந்தக் கூட்டங்கள்' நடைபெறும் இடங்களில் அவர்கள் எட்டிப் பார்ப்பதுகூட தங்களின் ''கவுரவத்''திற்கு இழுக்கு ஏற்படுமோ யென்று அந்தக் ''கனவான்''கள் கருதி வந்தார்கள்.

இந்த அவல நிலையை ஒழித்து கட்சியை உண்மை உழைப்பாளர்களிடம் கொண்டுவர வேண்டுமென்பதும், அதேபோல ஏழை-நடுத்தர மக்களின் இயக்கமாக கட்சி மலரவேண்டும் என்பதும், அறிஞர் அண்ணா அவர்களின் பேரவா ஆகும். என்றாலும் அதை உடனடியாக நிறைவேற்ற அண்ணா அவர்களால் முடியவில்லை. ஏனெனில் அண்ணா அவர்களைப் போன்ற எண்ணம் படைத்தவர்கள், அன்று கட்சியில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில்தானிருந்தனர்.

இந்நிலையில்தான் அதாவது 1938-ல் துவக்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் 'போராட்டம் முடிந்த பிறகு திருவாரூரில் நீதிக்கட்சியின் 15-வது மாநாடு நடை பெற்றது. அம்மாநாட்டுக்கு, கட்சித் தலைவரான பெரியார் அவர்கள் தலைமை வகித்தார். அன்று தமிழகம், கேரளம், ஆந்திரம், கருநாடகம் ஆகிய நான்கு மொழி வழி மாநிலங்களுக்கும் ஒன்று சேர்ந்த சென்னை ராஜ்யமாக விளங்கி வந்தது. எனவே அம் மாநாட்டில் ஆந்திர—கேரள—கருநாடக மாநிலங்களிலிருந்தும் தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

[என். வி. என்.]

இம்மாநாட்டில்தான் தமிழ்நாடு தமிழருக்கே என்று அதுவரை முழங்கப்பட்டு வந்தது, திராவிட நாடு திராவிடருக்கே என்று முழங்கப்பட்டது. தமிழக—ஆந்திர—கேரள—கருநாடக மக்கள் இனத்தால் ஒன்றுபட்டவர்கள் என்றும் மொழியால் மட்டுமே வேறுபட்டவர்கள் என்றும் எடுத்து விளக்கப்பட்டது.

எனவே கட்சிக்குப்பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்பதைவிட திராவிட இயக்கம் (கழகம்) என்று இனி அழைக்கப்பட வேண்டும் என்றும் உறுப்பினர்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இதைப்பற்றி அடுத்து சேலத்தில் நடைபெற யிருக்கும் மாநாட்டில் முடிவெடுக்கலாம் என்றும், அதுவரை இதுபற்றி ஆழ்ந்து சிந்திப்பதென்றும், பிறகு விவாதித்து முடிவெடுப்பதென்றும் பொதுவான ஓர் உடன்பாடு காணப்பட்டது.

மாநில மாநாடு நடைபெறும் போதுதான் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தேர்தலும் மாவட்ட வாரியாக அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகள் கூடி தேர்ந்தெடுப்பார்கள். அதுபோலவே சென்னை மாவட்டத்திலிருந்து மாநிலக்குழுவுக்கான பிரதிநிதிகள் தேர்தல், மாநாட்டுப் பந்தலில் சென்னை மாவட்டத்திற்கு என்று அமைக்கப்பட்ட விடுதியில் நடைபெற வேண்டியதாயிற்று.

அதுவரை கட்சிக்காக ஓயாது உழைக்கும் தோழர்கள், அக்குழுவில் இடம் பெற்றதில்லை. ராவ் பகதூர் எ. துரைசாமி முதலியார் (டாக்டர் எ. ஆர். அவர்களின் மூத்த சகோதரர்) டி. சுந்தரராவ் நாயுடு, ஆர். மதனகோபால் நாயுடு, ராவ்சாகிப் நடராசப் பிள்ளை போன்றவர்கள் தான் இருந்துவந்தனர்.

எனவே, இம்முறை அவர்களில் சிலரும், புதியதாகச் சிலரும் ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்பது அண்ணாவின் எண்ணம். அதாவது நிர்வாகக்குழுவில் ஆர்வமுடைய இளைஞர்களை, உழைப்பாளர்களை இடம்பெறச்செய்து படிப்படியாக நீதிக்கட்சியை மக்களின் இயக்கமாக வளரச் செய்யவேண்டும் என்பது அண்ணா அவர்களின் நீண்டகால ஆசையாகும். ஆதலின் திருவாரூர் மாநாட்டில் அந்தக் கருத்தை வேண்டுதலாக கூறினார்.

அண்ணாவின் எண்ணத்தை அந்த ''கனவான்கள்'' ஏற்கவில்லை. சாதாரண ஆட்களுடன் நாங்களும் நிர்வாகக் குழுவில் உட்காருவதா...செச்சே, அதெல்லாம் ஒரு இடங்கூடத்தரமுடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர். அண்ணா எவ்வளவோ வேண்டியும் பயனில்லை.

கடைசியாக அண்ணா அவர்கள் என்னையும், காலஞ்சென்ற தொழிலாளர் தலைவர் எஸ். நடேசன், தோழர்கள் சி. கணேசன், சிவஞானம், புலவர் செல்வராஜ், டி. வி. முருகேசம், என். டி. முத்து ஆகிய தோழர்களையும் அழைத்துக் கலந்து பேசினார். அதன் விளைவாக நானும், என். சீவரத்தினம், எஸ். நடேசனார், டாக்டர் தருமாம்பாள் ஆகியோர் போட்டியிடுவதென்று முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு நாங்கள் போட்டியிடப் போகிறோம் என்ற செய்தி அந்த 'கனவான்'களுக்கு எட்டிற்று. செய்தியைக் கேட்டு அவர்கள் அடைந்த வேதனைக்கு அளவேயில்லை. இந்தப்பிரச்சினையைப் பெரியார் வரையில் கொண்டுபோனார்கள். ஆனால் அண்ணா அவர்கள் மிக உறுதியாக வாதாடியதால் அவரும் நான் என்ன செய்யட்டும் என்று கூறிவிட்டார்!

ஆக, இறுதியாகத் தேர்தல் நடைபெறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

இத்தேர்தல் முடிவு என்ன என்பதையும் அதன் விளைவுகள் யாவை என்பதையும் அடுத்த வாரம்விவரிக்கிறேன்.

(தொடரும்)

o

# திரையுலகில் சுந்தரம்

○

திரையுலகிலே சேலம் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது. திரைப்படத் துறையை தொழில் என்ற நிலையில் மாடர்ன் தியேட்டர்ஸின் அதிபரான டி. ஆர். சுந்தரம் வெற்றிகரமாக நடத்திவந்தார். சேலத்திலிருந்து சுந்தரத்தின் முத்திரையோடு வெளிவந்த படங்கள் அனைத்தும் வெற்றிப்படங்களல்ல; ஆனால், தரமான படங்களை தம்மிடமிருந்து எதிர்பார்த்தோரை சுந்தரம் ஏமாற்றிவிடவில்லை. தனிப்பட்ட ஒரு நிறுவனத்தின் மகத்தான சாதனை என்ற அளவில் மாடர்ன் தியேட்டர்ஸாரின் சின்னத்தோடு 98 படங்கள் இதுவரை வெளிவந்திருக்கின்றன.

தென்னிந்திய படத்துறைக்கு மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்ட கலையுலகிற்கே இது ஒரு மறக்கமுடியாத அற்புதம்! இருபது வருடங்களுக்கு மேல் இணையற்ற தன் திறமையை கலைக்கும், தொழிலுக்கும் சரிசமமாக பங்கிட்டளித்த டி. ஆர். சுந்தரம் சென்ற கிழமை காலமானார் என்ற செதியை சிறிது அதிர்ச்சியோடு தான் கேட்க முடிந்தது!

'நூறு படங்கள்' சுந்தரத்தின் லட்சியமாயிருந்தது. அந்த லட்சியத்தை எட்டிப்பிடிக்க, சிறிது இடைவெளி இருக்கும் போதே, காலம் அவரை கொள்ளையிட்டதை என்னவென்று சொல்வது?

பழம்பெரும் அமைப்புகளிலே ஒன்றான மாடர்ன் தியேட்டர்ஸ் கலையை அதற்கே உரித்தான தனித்தன்மையிலும், தொழிலை வெற்றிகரமாமவும் நடத்திக்காட்டியதால் படத்துறைக்கே நிலையான ஒரு 'கௌரவம்' வாய்த்திருக்கிறது. மேல்நாடு சென்று கற்றறிந்த சுந்தரம் படத்துறையில் ஈடுபட்டதும் இதற்கு மற்றொரு காரணம்.

படத்துறையைப் பொறுத்த வரை சுந்தரம் எல்லாவற்றிலுமே முதன்மை பெற்றிருந்தார். முதல் மலையாளப்படம், முதல் தமிழ் வண்ணச் சித்திரம், தென்னாட்டில் தயாரான முதல் ஆங்கிலப் படம், முதல் முழுநீள மலையாள வண்ணப்படம், இவைகளை நினைவுக்குக் கொண்டுவந்தால், இந்த சாதனைகளுக்கு நாம் சுந்தரத்தின் பெயரைத்தான் குறிப்பிட வேண்டியிருக்கும்.

படக்கலை இந்த அளவு சீர்திருந்தாத அந்த நாட்களில் பேராசிரியர் சுந்தரனாரின் 'மனோன்மணியத்தை' படமாக்கியவர் சுந்தரம். 'மனோன்மணி' வெளிவந்தது, அதுவரை இருந்த படத்துறையின் இயல்புகளையும், மரபுகளையும் மாற்றி எழுதவேண்டிய அளவுக்கு படம் வெற்றிபெற்றது! காட்சி அமைப்பிலும், பாத்திரங்களை அறிமுகம் செய்த புதுமையிலும் 'மனோன்மணி' நிகரற்றிருந்தது. அதேபோது துறையின் தேவையையும், கலையின் அழகையும் அது ஒரே நேரத்தில் நிறைவு செய்தது!

சேர மன்னன் புருஷோத்தமனையும். ஜீவக பாண்டியனையும், கெடுமதி குடிலனையும், சாந்தம் தவழும் சுந்தர முனிவரையும், பலவேதனையும், தோழி வாணியையும் யார்தான் மறந்துவிட முடியும்? 'மனோன்மணி' பக்திப் படங்கள், புராணப்படங்கள் வழிகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தயாரிப்பு. இதற்கு முன்னரே 'உத்தமபுத்திரனை' தயாரித்து இரட்டைவேட பாணியில் ஒரு

## சேரன்தம்பி

புதுமையை செய்திருந்தார் சுந்தரம். 'மனோன்மணி' நுணுக்கத் துறையிலும், படப்பிடிப்பிலும், நடிப்பிலும், வசன அமைப்பிலும், 'உத்தமபுத்திரனை'விட பெரிய அளவில் சீர் பெற்றிருந்தது.

சேரனின் அவையும், மனோன்மணியின் அந்தப்புரமும், ஜீவகனின் போர்க்கள முழக்கமும், வீரர்களின் யுத்த கீதமும், குடிலன் அஞ்சி அஞ்சி நடைபோடும் இருண்ட குகை வழியும் இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னரும் கண்ணிலேயே நிற்குமளவுக்கு சுந்தரம் படத்தை அற்புதமாக தயாரித்திருந்தார்.

சுந்தரத்தின் வெற்றியும், படங்களுக்குக் கிடைத்த மகத்தான வரவேற்பும் பல புதியவர்களை இந்தத் துறையில் கவர்ந்திழுக்க பெரிதும் உதவின.

யுத்த சூழ்நிலையில் சுந்தரம் தயாரித்தளித்த 'பர்மா ராணி' நினைவிலே நிற்கும் படங்களில் ஒன்று. ஜப்பான் படைத்தலைவனாக இதில் சுந்தரம் பாத்திரமேற்று நடித்திருந்தார். திரையிலே அந்த பாத்திரத்தை அறிமுகம் செய்வித்த தன்மையும், சுந்தரத்தின் தோற்றமும் கம்பீரம் குறையாமலிருந்தன.

அடுத்ததாக 'சுலோசனா'வில் இந்திரஜித்தாக அவர் தோன்றியது எடுபடவில்லை. காலத்தை உணர்ந்த சுந்தரம் நடிப்புத்துறையிலிருந்து கௌரவமாகவே விலகிக்கொண்டு, வழக்கம்போல மற்ற துறைகளில் தம் ஆற்றலை பயன்படுத்தினார்.

புதியவர்களை அறிமுகப்படுத்துவதோடு புதிதாக அரும்பிவரும் நட்சத்திரங்களையும், கலைஞர்களையும் அவர்களது திறமை பளிச்சிடும் வண்ணம் பயன்படுத்துவதிலும் சுந்தரம் தேர்ந்தவராயிருந்தார். படவுலகில் எந்தத் துறையில் புதியவர்கள் ஜொலித்தாலும் அவர்களுக்கு சேலத்திலிருந்து கண்டிப்பாக அழைப்புவரும். மேலும் நல்ல வாய்ப்புகளை அளித்து அத்தகையோரை சுடர்விடச் செய்வதில் சுந்தரம் தணியாத ஆர்வம் காட்டிவந்தார்.

அப்போது 'மருத நாட்டு இளவரசி'யை எழுதி அறிமுகமாயிருந்த கலைஞர் மு. கருணாநிதியை அழைத்து 'மந்திரி குமாரி'யை எழுத வைத்ததின் மூலம் கேட்பாரற்றுக்கிடந்த வசனத்துறைக்கு புத்துயிரளித்தார். தணியாத தமிழார்வமும், கட்சிப்பற்றும் கொண்ட ஒரு இளைஞரின் தனிச் சிறப்பை உணர்ந்து, படத் துறையே கண்டிராத அளவுக்கு படத்துறையே கண்டிராத தன்மையில் அவருக்கு விளம்பரம் கொடுத்து 'வேலைக்காரி'க்குப்பின் வசனத்திலே புரட்சி விளைத்த படமாக, திரு. சுந்தரம் 'மந்திரி குமாரி'யை தயாரித்திருந்தார்.

பின்னர் அவர் தயாரித்த படங்கள் அனைத்தும் வியாபார அளவில் சீரான வெற்றியையே அளித்தன. ஆண்டுக்கு மூன்று அல்லது நான்கு படங்களை சேலத்திலிருந்து நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

துரித தயாரிப்பு இன்று ஒரு மாடலாக இருந்தாலும், சுந்தரத்தின் வெயியீடுகள் எல்லாமே ஓரளவுக்கு துரித தயாரிப்புகளே!

அந்த நாட்களில் அவர் கண்டெடுத்த புதிய கலைஞர்கள், நட்சத்திரங்கள், மின்மினிகள் அனைவரும் இன்று பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக சுடர் விடுகிறார்கள்! படத்துறையைப் பொறுத்தவரை சுந்தரம் ஒரு கால கட்டத்தையே தம்முடையதாக ஆக்கிக்கொண்டார் என்று குறிப்பிடுவதிலும் தவறு இல்லை!

சுந்தரம் பழைய பரம்பரையைச்சேர்ந்தவர்; சிஸில்பிடிமில்லி, சாந்தாராம், சத்யஜித் ராய் போன்றோரின் வரிசையிலே சுந்தரத்தின் பெயரை சேர்ப்பது சிறிது சிரமமான விவகாரம்தான்; கலையா, தொழிலா என்று இங்கும் அங்கும் அசைந்தாடி, இரண்டிலும் தோல்வி கண்டு ஏதோ 'குருட்டுப் போக்கில்' வளர்ந்து வரும் தென்னாட்டு திரையுலகில் சுந்தரம் போன்றவர்கள் தோன்றியிருக்காவிட்டால் படத்துறையின் எதிர்காலமே நம்பிக்கையற்றதாகி விட்டிருக்கும்! படத்துறைக்கு 'சிரஞ்சீவித்துவம்' அளித்து, அதன் மூலம் பலருக்கு வாழ்வளித்தவர் சுந்தரம்!

கலையம்சத்தில் அவரது சமீப கால தயாரிப்புகள் எதையும் சாதித்துக் காட்டிவிடவில்லை என்றாலும், தொழில் என்ற அளவில் அவை மறக்கமுடியாத இடத்தைப் பெற்றிருக்கின்றன.

சுந்தரத்தோடு படத்துறையின் ஒரு கால அளவு முடிகிறது.

அவரது மறைவு, கலையுலகிற்கு ஆற்றவே இயலாத பேரிழப்பு!

மாடர்ன் தியேட்டர்ஸின் வரலாற்றையும், படவுலகில் அதுதனதாக்கியிருந்த ஆதிக்க விரிவையும் நினைத்துப் பார்க்கும் போது, 'ஒரு தனி மனிதனின் குறுகிய வாழ்நாளின் சாதனைகளா இத்தனையும்?' என்று வியக்கத்தான் தோன்றும்.

அப்படி வியந்து கொண்டிருந்தோரை வேதனையிலாழ்த்திவிட்டது சுந்தரத்தின் எதிர்பாராத மறைவு. தமது பெயர் என்றும் பசுமையாகவே இருக்கத்தக்க அளவில் சுந்தரம் சில நினைவுகளை விட்டுச் சென்றிருக்கிறார்.

......அவை என்றும் பசுமையாகவே இருக்கட்டும்!

∴


**அறிஞர் அண்ணா**

**கார் பரிசளிப்பு விழா**

——0——

**சிதம்பரத்தில் 29-9-63 அன்று சிறப்புற நடைபெறும்**

சிதம்பரம் நகரில் 29—9—'63-ல் அறிஞர் அண்ணாவிற்கு, அவர்களின் 55-வது பிறந்தநாளையொட்டி பியட் கார் பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற இருக்கிறதென்பதை, விழா அமைப்பாளர் தில்லை-வில்லாளன் எம்.ஏ., பி.எல். அறிவிக்கிறார்.


ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகீம் சேட் தெரு, சென்னை-1